நினைவுகள்
எண்ணங்கள்
நிச்சயமாய் அமைந்துவிடில்
நினைவுகள் மறப்பதில்லை

கஜபதி
(வெளிப்புற படப்பிடிப்பு)

[29861]

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

நிஜங்கள் நிழலாக
நினைவுகள் மறப்பதில்லை

கஜபதி
(வெளிப்புற படப்பிடிப்பு)
இல. 59, அரசடி வீதி,
தட்டாதெருச் சந்தி,
யாழ்ப்பாணம்.

[29861]

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 பங்குனி 01 திங்கட்கிழமை (14 03 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 107

தீர்வுக்கு வேறு மாற்றுவழி தெரியாததால் ராணுவ நடவடிக்கையைத் தொடர்கிறோம்

பிரதமர் ரணில் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 14

பிரச்சினைக்குத் தீர்வுகாண வேறு மாற்று வழி இல்லாததால் இராணுவ நடவடிக்கையையே தொடர வேண்டியுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க "இந்து" நாளிதழுக்கு அளித்த பேட்டி ஒன்றில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்,

அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு கிழக்கு இணைப்புக் குறித்து தீர்மானிப்பதற்காக கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதா என்பது பற்றி எந்த ஒரு முடிவையும் அரசாங்கம் இது வரை எடுக்கவில்லை

கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியை நிராகரித்துள்ளனர் என்று கூறுவதற்கு இடமில்லை.

(4ஆம் பக்கம் பார்க்க)

வீரமரணம்

யாழ்ப்பாணம், மார்ச். 14

கடந்த 9 ஆம் திகதி மாலை 3 மணியளவில் இரணைஇலுப்பைக்குளம் என்னுமிடத்தில் ஏற்பட்ட எதிர்பாராத விபத்து ஒன்றில் விடுதலைப்புலிகள் இயக்க போராளியான வீரவேங்கைவிவேகன் (பொன்னையா இராசன் ஓமந்தை) வீரமரணமடைந்தார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

நேற்று முதல் ஒரு வாரத்திற்கு

தென்மாகாணத்தில் டி. பி. சூறாவளி பிரசாரம

சிறிமா, சந்திரிகாவும் களத்தில்

கொழும்பு மார்ச் 14

நேற்று முதல் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை — ஒரு வார காலத்துக்கு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க தென்மாகாணத்தில் சூறாவளி தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவார் என்று நேற்று வெளியான கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

தென் மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் அவர் தொடர்ச்சியாகக் கூட்டங்களில் பேசுவார்.

இதேவேளை பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் முக்கிய பிரசாரக் கூட்டங்கள் இன்று மாத்தறை மாவட்டத்தில் உள்ள தெனியாய, ஹக்மன, ஹங்கொடகில ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளன.

இக்கூட்டங்களில் எதிர்க்கட்சித் தலைவியும் முன்னணியின் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, மேல்மாகாண முதலமைச்சர் திருமதி சந்திரிகா குமாரணதுங்கா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ 6)

குடாநாட்டில் நேற்று ஹெலித் தாக்குதல்

யாழ்ப்பாணம், மார்ச் 14

குடாநாட்டில் நேற்று ஹெலி பரவலாக பல இடங்களிலும் தாக்குதல் நடத்தியது.

நேற்றுக்காலை 9 மணியளவில் அரியாலை கிழக்கு பகுதியில் ஹெலி வட்டமிட்டு வேட்டுக்களைத் தீர்த்தது.

நேற்று முற்பகல் 11.15 மணியளவில் வலிகாமம் வடக்குப் பகுதியில் ஹெலி 50 கலிபர் தாக்குதலை மேற்கொண்டது.

நேற்று முற்பகல் 11.45 மணியளவில் அச்சுவேலி, இடைக்காடு, பத்தமேனி, தம்பாலைப் பகுதிகளில் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஹெலி தாக்குதல் நடத்தியது. இதனால் அப்பகுதிகளில் பதற்ற நிலைமை காணப்பட்டது. சுமார் அரை மணித்தியாலம் ஹெலி சுற்றிச் சுற்றி தாக்குதலை தொடர்ந்தது.

தென்மராட்சியிலும் சில இடங்களில் ஹெலித் தாக்குதல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3-17-11 72)

சுவிஸிலிருந்து ஈழத்தமிழர் மே மாதம் திரும்பி வருவர்!

நுகேகொடையில் தங்க வைக்க இடம் தெரிவு

கொழும், மார்ச் 14

சுவிஸில் உள்ள இலங்கை அகதிகளில் ஒரு தொகுதியினர் மே மாதம் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட விருப்பதாகவும் —

அவர்களை தற்காலிகமாக தங்கவைக்க நுகேகொடையில் ஓரிடம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும்—

கொழும்பு வந்துள்ள சுவிற்சர்லாந்து அகதிகள் கவுன்சில் பிரதிநிதிகள் தூதுக்குழு தெரிவித்துள்ளது.

கொழும்புக்கு வந்துள்ள இத்தூதுக்குழுவினர் இலங்கை அகதிகளை திருப்பி அனுப்பும் நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து வருவதாக கொழும்புப் பத்திரிகை செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

இவ்வருட முடிவுக்குள் 300 இலங்கைத் தமிழ் அகதிகள் திருப்பி அனுப்பப்படுவர் என்றும்—

முதல் தொகுதியினர் மே மாதத்தில் அனுப்பப்படுவர் என்றும்— அக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

திருப்பி அனுப்பப்படுவோர் தற்காலிகமாக தங்க நுகே கொடையில் வசதி செய்யப்பட்டுள்ளது என்றும்—

ஒவ்வொரு அகதிக்கும் 10 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்றும்—

தற்காலிக இருப்பிடத்தில் ஒரு மாதகாலம் தங்க அவர்கள் அனுமதிக்கப் படுவர் என்றும்— அதேசமயம் அங்கு தங்கியிருக்கும் காலத்தில் தினமும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

புலமைப் பரிசிலில் மோசடி:

இந்தியா சென்ற மாணவர் திருப்பி அனுப்பப்பட்டனர்!

இவர்கள் அதிகாரிகளின் பிள்ளைகளாம்

இந்திய புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் உயர் படிப்பிற்காக இலங்கையிலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட மாணவர்களில் கணிசமான அளவினர் இந்திய அரசினால் திருப்பி அனுப்பப்பட்டு விட்டனர்

கொழும்பு சிங்களத் தினசரி ஒன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது

புலமைப் பரிசில் திட்டத்திற்கென இந்திய அரசினால் கோரப்பட்ட கல்வித் தகைமைகள் இல்லாத பலர் இந்தியாவிற்கு அனுப்பப்படிருந்தது கண்டு பிடிக்கப்பட்டதை அடுத்தே இந்திய அரசு சம்பந்தப்பட்ட மாணவர்களை திருப்பி அனுப்பியதாம்

இவ்வாறு தகுதி இன்றி தெரிவு செய்யப்பட்டோரில் பலர் அரசாங்க உயர் மட்ட அதிகாரிகளின் பிள்ளைகள் என்று கூறப்படுகிறது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

இடைக்காடு, தம்பாலை பகுதிகளில்

இரவில் சத்தத்துடன் வெடித்த ஷெல்கள்!

நேற்றுமுந்தினம் இரவு வேளை அச்சுவேலிப் பகுதியில் ஷெல் சத்தங்கள்கேட்டன இருபதுக்கும் மேற்பட்ட ஷெல்கள் தம்பாலை, இடைக்காடு பகுதிகளில் விழுந்து பெரும் சத்தத்துடன் வெடித்தன.

அதேசமயம், காவலரண்களில் இருந்து இராணுவத்தினர் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி கடும் துப்பாக்கி பிரயோகங்களையும் நடத்தினர்.

இதனால் அச்சுவேலி, தோப்பு, நவக்கிரி, ஆவரங்கால் பகுதிகளில் பதற்றம் நிலவியது.

நேற்று நண்பகல் வேளையும் இடைக்காடு, கதிரிப்பாய் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதற்கிடையில், நேற்று நண்பகலுக்குப் பின்னர் அரை மணித்தியால இடைவெளியில் வளலாய் இடைக்காடு பக்கமாக இரு பெரும் குண்டுச் சத்தங்கள் கேட்டன.

இக் குண்டுச் சத்தங்களால் வடமராட்சிப் பகுதியும் அதிர்ந்தது.

(ஒ-72-11-173-15)

தென்மாகாணத்தில் ஐ. தே. கவுக்கே வெற்றி!

சூடு தணிவதற்கு முன்னர் ஜூலையில் பொதுத் தேர்தல்

சிரேஷ்ட அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 14

எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறும் தென் மாகாண சபைத் தேர்தலில் ஐ தே. க. வெற்றிபெறும். பொதுமக்களின் அந்த ஆதரவுச்சூடு தணிய முன்னர் — இவ்வாண்டு ஜூலை மாதத்திலேயே — பொதுத் தேர்தல் நடத்தப்படுவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன. அமைச்சர்களில் பெரும்பாலானோரின் கருத்தும் இதுவே.

அரசின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் இவ்வாறு தகவல் வெளியிட்டதாக 'லங்காதீப' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

★ ஜனாதிபதித் தேர்தல் திட்டமிட்டபடி இவ்வாண்டு டிசம்பரில் நடைபெறும்.

★ எதிர்வரும் ஜூலை 3 ஆம் திகதி கம்பஹாவில் 'கம் உதாவ' கொண்டாட்டங்கள் நிறைவேறும் திகதிக்குப் பின்னர் பொதுத்தேர்தல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம் வருவதற்கு 135 பிக்குகள் விருப்பம்

கொழும்பு, மார்ச் 14

சமாதான முயற்சியில் ஈடுபடுவதற்காக யாழ்ப்பாணம் வருவதற்கு 135 பௌத்த பிக்குகள் விருப்பம் தெரிவித்துள்ளனர்

தேசிய வளங்களைப் பாதுகாக்கும் பிக்குகள் நிறுவனத்தின் செயலாளர் மாதம்பாகம அஸ்கிரி நாயக்க தேரர் நேற்றைய "லங்காதீப" பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

யாழ் விஜயத்தை ஆரம்பிக்க முன்னர் மேற்படி 135 பிக்குகளுக்கும் நிலைமையை அறிவுறுத்துவதற்கான கூட்டம் ஏப்ரல் 11 ஆம் திகதி கொழும்பில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் சொன்னார்.

ஈ.பி.டி.பி. பணிமனையில் குண்டு வெடித்து பலர் காயம்

கடந்த வாரம் மண்டூரில் சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 14

கடந்த 7 ஆம் திகதி இரவு 10 மணியளவில் மண்டூர் ஈ. பி. டி. பி. அலுவலகத்தில் குண்டு ஒன்று வெடித்தது. அதனால் பலர் காயமடைந்தனர்.

இதனைத் தொடர்ந்து மறுநாள் காலை வெல்லாவெளி, அன்னமடு, 13 ஆம் கிராமம் ஆகிய விசேட அதிரடிப்படை முகாம்களில் இருந்து வந்த விசேட அதிரடிப் படையினர் ஈ.பி.டி.பி. அலுவலகத்தைச் சுற்றிவளைத்து அங்கிருந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

புகலிடம் அளிக்க அனுமதி மறுப்பு!

சுவீடனில் ஈழத் தமிழர் தீமூட்டி தற்கொலை செய்ய முயற்சி!

கொழும்பு, மார்ச் 14

சுவீடனில் அடைக்கலம் கோரியிருந்த ஈழத் தமிழர் ஒருவர் தனக்குத் தானே தீமூட்டிக் கொண்டதையடுத்து மிகவும் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவைச் சேர்ந்த திஸ்ஸவீரசிங்கம் (வயது 36) என்ற அந்த இளைஞர் சுவீடன் அரசால் பலவந்தமாக திருப்பி அனுப்பப்பட இருந்ததாகவும் —

அதனை எதிர்த்தே அவர் தீக்குளித்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுவீடனில் உள்ள என்சோம்பிங் என்ற பகுதியில் வசித்து வந்த பிரஸ்தாப இளைஞருக்கு சுவீடனில் தங்கியிருப்பதற்கு வழங்கப்பட்ட அனுமதி இன்றுடன் (மார்ச் 14) முடிவடைய இருந்தது என்றும் — அதன் பின்னர் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவதற்காக அவர் காவலில் வைக்கப்படுவார் எனவும் —

அந்நாட்டு குடிவரவு அமைச்சு அந்த இளைஞரிடம் தெரிவித்திருந்தது.

அதனைத் தொடர்ந்து கடந்த 2 ஆம் திகதி காலை 10-40 மணியளவில் தற்கொலை முயற்சியாக அந்த இளைஞர் தனக்குத் தானே தீமூட்டிக் கொண்டார். நெருப்பில் எரிந்து கொண்டிருந்த நிலையில் வீதியில் காணப்பட்ட அவரை சுவீடன் பிரஜை ஒருவர் காப்பாற்றி உப்சாலாவில் உள்ள போதனா ஆஸ்பத்திரி ஒன்றில் சேர்த்தார்.

அந்த இளைஞரின் உடலில் சுமார் 63 வீதமான பகுதியில் முற்றாக எரிந்து விட்டதாக மருத்துவ பரிசோதனைகள் தெரிவித்துள்ளன. இரண்டு நாட்கள் உணர்வற்ற நிலையில் காணப்பட்ட அவர் தொடர்ந்தும் ஆபத்தான நிலையில் இருப்பதாக கொழும்பு செய்தி ஒன்று தெரிவித்தது. (உ-5)

முச்சந்தி முரளி



தேர்தல் முடிவோடை. வாற சூறாவளியிலை உவரே அள்ளுப்பட்டாலும் ஆச்சரியமில்லைப் பாருங்கோ..!

ஸ்ரீலங்கா அரசு அடக்குமுறையை சுவீடன் சம்பவம் காட்டுகிறது!

தமிழர்களின் சர்வதேச கூட்டமைப்பு அறிக்கை

கொழும்பு மார்ச் 14

இலங்கைக்கு பலவந்தமாகத் திருப்பி அனுப்பப்படுவதைவிட தீக்கு இரையாகி மரணிப்பதை விரும்பிய தமிழ் இளைஞரின் செயலானது கொழும்பிலும் ஸ்ரீலங்கா அரசின் கட்டுப்பாட்டிலும் உள்ள பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் அடக்குமுறைகளை பூரணமாக எடுத்துக் காட்டுகிறது.

சுவீடனில் இருந்து நாட்டுக்கு திருப்பி அனுப்பப்படுவதை எதிர்த்து இளைஞர் ஒருவர் தீக்குளித்த சம்பவம் தொடர்பாக தமிழர்களின் சர்வதேசக் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

உலகின் பல நாடுகளையும் உள்ளடக்கிய அந்த அமைப்பு —

அடைக்கலம் கோரியுள்ள தமிழர்களைத் திருப்பி அனுப்புவது என சில மேற்கு நாடுகள் எடுத்துள்ள முடிவையிட்டு தனது கவலையை தெரிவித்துள்ளதுடன் அந்த முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளது.

"இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படும் தமிழ் அகதிகளுக்கு உயிராபத்து ஏற்படும் அபாயம் குறித்து நாம் கவலையடைகின்றோம்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

மீன்பிடி தடை நீக்கப்பட்டாலும் கூட கடற்படை ரோந்து அதிகரிக்குமாம்

கொழும்பில் இருந்து அரச அதிபருக்குத் தகவல்

யாழ்ப்பாணம், மார்ச் 14

திருகோணமலையில் இருந்து மன்னார் வரையான கடல் பகுதியில் மீன் பிடிப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த [illegible]கப்பட்டாலும் — கடற்படையினரின் கண்காணிப்பு ரோந்து நடவடிக்கைகள் அதிகரித்து இருக்கும் — என்று புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சுச் செயலாளர் [illegible] வித்துள்ளார்.

யாழ். அரச அதிபருக்கு நேற்று அனுப்பியிருந்த கடிதத்திலேயே புனர்வாழ்வு அமைச்சுச் செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 21 ஆம் திகதி ஜனாதிபதி தலைமையில் நடந்த கூட்டத்தில் தடை நீக்குவது குறித்து முடிவு எடுக்கப்பட்டதாகவும் —

இக்கூட்டத்தில் பாதுகாப்பு மற்றும் நிதி அமைச்சு செயலாளர்களும், கடற்படைத் தளபதியும் சமுகமளித்திருந்த

(4ஆம் பக்கம் பார்க்க)

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

அல்சேஷன் ஆண் நாயும், கூடும், சொப்பர் சைக்கிளும் (சிறிய) உடனடியாக விற்பனைக்குண்டு விலாசம் I K. நடேசன் "நந்தினி வாசா", 15, மலர்மகள் வீதி, அரியாலை. (29879)

பழைய புத்தகங்கள், பத்திரிகைகள் விற்பனைக்கு உண்டு. பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-7549)

கோழிக்குஞ்சு விற்பனை

சைவலன் பிறவுன் ஒரு கிழமை வளர்ச்சியடைந்த லேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. "மல்லிகாபதி" சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (29889)

கோல்டன் கொமற் 2 கிழமைச் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. பிறிமா பொயிலர், கோல்டன் கொமற் பேட்டுக்குஞ்சுகள் முன் கூட்டிப்பதிவு செய்பவர்களுக்கு எடுத்துக் கொடுக்கப்படும். விபரங்களுக்கு பழைய விக்கினேஸ்வரா டிஸ்பென்சரிக்கு எதிர்வீடு. கே. கே. எஸ். றோட், சுன்னாகம். (பெற்றோல் செற் அருகில்) (7028)

தேவை

பெற்றோல் பாவனையில் உள்ள சாளி C50, C70 மோட்டார் சைக்கிள் தேவை. தரகர் வேண்டாம். இல. 619, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (29887)

தவறிவிட்டது

கைச்செயின் ஒன்று கஸ்தூரியார் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் கீழ்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும் G. V. Kanesalinkam, இல. 298, K. K. S. Road, Jaffna. (29112)

ஈவ்லின் நிறுவன கருத்தரங்கு

திருநெல்வேலி ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டு நிறுவனத்தின் மாதக் கருத்தரங்கு எதிர்வரும் 17ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3-30மணிக்கு நடைபெறும்.

ஆயர் கலாநிதி எஸ் ஜெபநேசன் தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் பேராசிரியர் கா.சிவத்தம்பி 'யாழ்ப்பாணத்தின் புலமைத்துவ மரபு' என்னும் தலைப்பில் ஆய்வுரை வழங்குவார்

ஜெயந்தி விழா

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமகம்சரின் 159 ஆவது ஜெயந்தி விழா இன்று திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்தில் நடைபெறவுள்ளது.

இன்று பிற்பகல் 3 30 மணிக்கு ஆரம்பமாகும் மாலை நிகழ்ச்சிகளில் நுண்கலைக் கோவில் மாணவிகள் வழங்கும் "இராமகிருஷ்ணர் சரிதம்" என்னும் உரைச் சித்திரமும், இராமகிருஷ்ணாலய இயக்குநர் திரு. இ. ராஜமகேந்திரசிங்கத்தின் சிறப்புச் சொற்பொழிவும் இடம் பெறும். (இ-173-5)

கோழி வளர்ப்புக்கு ஊக்குவிப்பு

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துமுகமாக பல்வேறு செயற் திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றது. இதன் ஓர் அம்சமாக கடந்த மாதம் 7ஆம் திகதி நுணாவில் கிழக்கு கிராமிய உற்பத்திக்குழுப் பகுதியினால் தலா ஒரு குடும்பத்திற்கு 25 கோழிக்குஞ்சுகளும் தீவனமுமாக ஐந்து குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.

மேலும் இயக்கச்சிப்பகுதியில் 15 குடும்பங்களைத் தெரிவுசெய்து ஒரு குடும்பத்திற்கு தலா 2,500 ரூபா வீதம் மொத்தம் 37 ஆயிரத்து 500 ரூபாவும் மேற்படி திட்டத்தின் கீழ் கடந்த மாதம் 10 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளது. (ஒ)

உ

தென்மட்டுவில் - வேரற்கேணி

அருள்மிகு ஸ்ரீகந்தசுவாமி திருக்கோயில் இலட்சார்ச்சனை நிறைவுவிழா

காலம்: **15-03-1994** செவ்வாய்க்கிழமை

காலை 5-00	மணிக்கு	வேதபாராயணம்
6.00	"	திருமுறை பாராயணம்
7-00	"	மங்கள இசை
8 00	"	சிவாச்சாரிய பூஜை
8-30	"	யாகபூஜை நவகுண்ட பூஜை ஓமம் விசேட திரவிய ஹோமம்
11-00	"	மஹா சங்காபிஷேகம்
12-00	"	பூஜை

பிரதமகுரு: சிவாகமகிரியா தத்துவநிதி, கிரியாகலாமணி
சிவஸ்ரீ ச. சோமாஸ்கந்தக் குருக்கள்

மஹாசங்காபிஷேக சர்வபோதகாசிரியர்
பிரம்மஸ்ரீ ஈ வைத்தியநாதக் குருக்கள்
(மாவை)

இவர்களுடன் ஏனைய 9 குருமார்கள்
கலந்து சிறப்பிப்பார்கள்

மாலை 4 00 மணிக்கு பூஜை, சண்முகார்ச்சனை,
இந்திர பூஜை உற்சவம்.

5-00 மணிக்கு சங்கீத கதாப் பிரசங்கம்

நல்லைக் குருமணியின் பிரதம சிஷ்யன், ஞானகதாவாரிதி
அருள்மொழி இசையரசு

பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்தசர்மா

- திருக்கோயில் பரிபாலனசபை.

(29890)

பொதுக் கூட்டம்

யாழ் பல்கலைக்கழக கலைப்பீட 2ஆம் வருட மாணவர்களுக்கான பொதுக் கூட்டம் 15 — 3 — 94 செவ்வாய் காலை 10 மணிக்கு கலைப்பீடத்தில் இடம் பெறும். முக்கியமான சில முடிவுகள் எடுக்கவேண்டி இருப்பதால் அனைத்து மாணவர்களும் தவறாது சமூகம் தரவும்.

நன்றி

— மாணவர் பிரதிநிதி.

(29894)

நன்றி பகர்கின்றேன்

காரைநகர் கம்பன் கழகம் அண்மையில் இளம் கலைஞர் மண்டபத்தில் மூன்று நாட்களாக நடத்திய கம்பன் விழாவின் போது எனது நாட்டிய நிகழ்ச்சிக்கும் சந்தர்ப்பம் வழங்கியிருந்தார்கள்.

அந்த வகையில் எனது நாட்டிய நிகழ்ச்சி சிறப்புற அமைவதற்கு சந்தர்ப்பம் வழங்கிய காரைநகர் கம்பன் கழகத்தினருக்கும், எனக்கு ஆடல்கலை பழக்கிய ஆசிரியைக்கும், எனது ஆடல் அரங்கத்தில் மிருதங்கம் வாசித்த கலைஞருக்கும், வயலின் வாசித்த கலைஞருக்கும் பாடல்களை இசைத்த அன்புச் சகோதரிக்கும் எனது உளங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி,

இங்ஙனம்:
செல்வி த தர்மினி
(யா/ வேம்படி மகளிர் கல்லூரி மாணவி)

(சி/7444)

31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 17 — 01 — 1924

உதிர்வு: 12 — 02 — 1994

அமரர் நாகலிங்கம் தம்பிஐயா

(மானிப்பாய்)

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து எங்களை அன்போடும் பண்போடும் வளர்த்து எங்களுக்கோர் நல்வழி காட்டி வாழவைத்த தெய்வமே! உங்கள் நினைவுகள் என்றும் எங்களை விட்டுப் போகாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

[சி-7447]

உரும்பிராய் இந்துக் கல்லூரியின்

உயர்தர மாணவர் மன்றம்

நடத்தும்

"நட்பு நாடலும் நண்பகல் விருந்தும்"

இடம்: உரும்பிராய் இந்துக் கல்லூரி
காலம்: 14 - 03 - 1994 திங்கட்கிழமை
காலை 10-30 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

இந்நிகழ்வு சிறப்புற நடைபெற எமது நல்லாசிகள்

பிரபா பலபொருள்
வர்த்தக நிலையம்
உரும்பிராய்ச் சந்தி,
உரும்பிராய்.

நித்தியா
பாடசாலை சேவை
சிவன் வீதி,
உரும்பிராய்.

(29895)

கணக்கியல் / கணக்காய்வுப் பயிற்சி நெறி

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறை கணக்கியல் மற்றும் கணக்காய்வு தொடர்பான பயிற்சி நெறி ஒன்றை நடாத்தவுள்ளது. இப்பயிற்சி நெறிக்கு க. பொ. த உயர்தர வர்த்தகப் பிரிவில் சித்தியடைந்த ஆண்/பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியானவர்கள் தங்களால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடனும், சான்றிதழ்களுடனும் 16-03-1994 காலை 9.00 மணிக்கு கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு வருகைதரவும்.

குறிப்பு:-

பயிற்சி நெறிக்கான செலவு முழுவதும் எம்மால் ஈடுசெய்யப்படும். வேறு கற்கை நெறியில் கற்றுக் கொண்டு இருப்பவர்களுக்கு இடமளிக்கப்படமாட்டாது.

வருகைதர வேண்டிய முகவரி:-
யாழ். மாவட்ட வருவாய்ப்பகுதி செயலகம்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(சி/7556)

பிராந்தியம் 6 லயன்ஸ் புற்றுநோய் நிதியம்

Region 6 Lions Cancer Fund

15-03-1994 இல் நடைபெற இருந்த புற்றுநோய் நிதிய அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் 20-03-1994 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நாவலர் மண்டபம் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகிறேன்.

— பிராந்தியத் தலைவர்

(சி/7555)

Y. M C. A. JAFFNA

VACANCY
POST OF SECRETARY

Immediate vacancy exists for a personable efficient Secretary who should be a member of a Church affliated to the National Christian Council.

A pass in the Advanced Level and posses good Secretarial skills and be able to deal with correspondence independantly & efficiently. Should possess a sound knowledge of English both spoken & written.

Salary — 2 500-00 — 3 250-00
75 00 X 10 — Or Negotiable

Age — Below 45 years

Applications giving full bio data (with copies of certificates) should be sent under registered cover to reach the

PRESIDENT,
Y M C A.
JAFFNA.

On or before 23rd March 1994

[C-7554]

31ஆம் நாள் நினைவஞ்சலி
சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்

திருமதி சரஸ்வதி அருணாசலம்

தோற்றம்: 06 — 01 — 1929
மறைவு: 13 02 — 1994

நாளை (15 - 03 - 1994) செவ்வாய்க்கிழமை எமது மறைந்த தாயாரின் சபிண்டீகரண கிரியையிலும் மதிய போசனத்திலும், கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். மேலும் எமது அன்னையின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய அன்பர்களுக்கும், நண்பர்களுக்கும் மேற்கொண்டு உதவிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அ. ஜெகநாதன் (மூத்த மகன்),
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

உசன்,
[illegible]
மிருசுவில்.

[29886]

யாழ். மாவட்டத்தில்

நிவாரணப் பணிகளில் சுவிஸ் அமைப்பு ஈடுபடும்

யாழ் மாவட்டத்தில் நிவாரண மற்றும் புனர்வாழ்வுப் பணிகளில் சுவிஸ் தொண்டர் அமைப்பு ஒன்றும் ஈடுபட இருக்கின்றது.

நோர்வே, பிரிட்டன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த தொண்டர் நிறுவனங்கள் யாழ். மாவட்டத்தில் தற்சமயம் நிவாரண மற்றும் புனர்வாழ்வுப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன.

அண்மையில் கொழும்பு சென்றிருந்த யாழ் மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகள் சுவிஸ் நாட்டு தொண்டர் அமைப்பின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தியதை அடுத்து யாழ். மாவட்டத்தில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள அவர்கள் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனமான "ஹெல்விற்றாஸ்" (Helvetas) நிறுவன பிரதிநிதிகள் மூவர் எதிர்வரும் 19 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்ய உள்ளனர்.

ஆசிய பிராந்திய பொறுப்பாளர் திருமதி ஆன்சிசால்ஸ், இலங்கை வதிவிடப் பிரதிநிதி ஒற்றோ கொற்ச், செயற்திட்ட அதிகாரி திரு. மகுறால் ஆகியோரே இங்கு வரவுள்ளனர்

இவர்கள் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை இங்கு தங்கியிருந்து வடபகுதி வேலைத் திட்டங்களையும், அறிவுகளையும் பார்வையிடுவர்

இந்த தொண்டர் அமைப்பு கடந்த பல வருடங்களாக தென்பகுதியில் நிவாரணப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது (த-3-162)

மாதுறு ஓயாவில்

தமிழ்க் குடும்பங்கள் குடியேற்றப்படுமாம்!

கொழும்பு, மார்ச் 14

மாதுறு ஓயா வலது கரையில் 14 ஆயிரம் தமிழ்க் குடும்பங்களை துரிதமாக குடியேற்றவும் —

இந்தப் பகுதியின் கிழக்குப் பிராந்தியத்தில் 15 ஆயிரம் ஹெக்டயர் நெற்காணிகளை உருவாக்கவும் ஜனாதிபதி டி. பி விஜேதுங்கா இணக்கம் தெரிவித்துள்ளார்

கொழும்புத் தமிழ்ப் பத்திரிகை ஒன்று இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பான வேலைத் திட்டங்கள் ஏப்ரலில் ஆரம்பிக்கப்படும்.

இப்பகுதி அபிவிருத்தி செய்யப்பட்டால் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த தமிழரும், முஸ்லிம்களும் நன்மை அடைவராம். (த-9)

எம் பலத்தைஎடுத்துக் காட்ட கல்முனையில் தேசிய மாநாடு

முஸ்லிம் காங். தலைவர் அஷ்ரப் அறிவிப்பு

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய மாநாடு இம்மாதம் 19 ஆம் திகதி நடத்தப்படவிருக்கிறது.

இதற்கான அழைப்பை காங்கிரஸ் தலைவர் எம். எச். எம் அஷ்ரப் விடுத்திருக்கிறார்.

காங்கிரஸின் பலத்தை எடுத்துக் காட்டவே தேசிய மாநாட்டை இம்முறை கல்முனையில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று ஜனாப் அஷ்ரப் தெரிவித்தார்.

நாடு முழுவதிலும் இருந்து குறைந்தது ஒரு லட்சம் மக்கள் இம்மாநாட்டில் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் சொன்னார்.

"கல்முனை மாநாட்டுக்கு வெளிநாடுகளின் தூதர்கள் அனைவரையும் அழைக்கவுள்ளோம். அதன் மூலம் உலகுக்கு முஸ்லிம் காங்கிரஸின் பலத்தை எடுத்துக் காட்ட உள்ளோம்" — என்றும் அவர் கூறினார் (ஒ-ஈ)

பாடசாலைகளில்

★ ★ ★

யாழ்ப்பாணம் புனித சாள்ஸ் மகாவித்தியாலய ஆரம்பப் பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டிகள் நாளை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் திருமதி. பி.எல். சின்னத்துரை தலைமையில் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

மனித முன்னேற்ற நிலையத்தின் யாழ். மறைமாவட்ட இயக்குநர் அருட் தந்தை இன்னறி ஜெபநேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

★ ★ ★

சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1 30 மணிக்கு அதிபர் திரு ச. விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெறும். (ஒ-11)

ஆலயங்களில்

இமையாணன் உம்பவாழி அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோயில் வருடாந்த மஹா நவோத்தர சகஸ்ர மஹா சங்காபிஷேகம் தொடர்பான விசேட கிரியைகள் நாளை செவ்வாய் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

மறுநாள் காலை 7 மணி முதல் யாகபூஜை, விசேட ஹோமம் ஆகியவை இடம் பெற்று, காலை 10 மணிக்கு சங்காபிஷேகமும் விநாயகப் பெருமான் திருவுலாவும் இடம் பெறும். (த-155)

படுவான்கரை பகுதி துண்டிக்கப்பட்டது

கொழும்பு, மார்ச் 14

மட்டக்களப்பு மாவட்டம்— படுவான் கரைப்பகுதி ஏனைய பகுதிகளிலிருந்து துண்டிக்கப்பட்ட ஒன்றாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது

இக்கிராமத்தில் வாழும் மக்கள் ஏனைய பகுதிகளுக்குச் செல்லக்கூடியதாக பஸ் போக்குவரத்துவசதிகள் வழங்கப்படவில்லை என்றும்

அவர்கள் சைக்கிள் மற்றும் கால்நடையாகவே தமது பயணங்களை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது (த-எ)

இராணுவ கட்டுப்பாட்டு பகுதி தபால்கள்

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களுக்கு தபால்கள் அனுப்புவோர் அவற்றை நாளை செவ்வாய் காலை 9 மணிக்கு முன் யாழ். பிரதமதபாலக தபால் பெட்டியில் சேர்க்குமாறு பிரதம தபாலதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். (த-17)

பகவான் ஆங்கில மருத்துவ சேவை

14-3 94 முதல் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (டாக்டர் சண்முகலிங்கம் வீட்டிற்கு சற்று முன்பாக) என்ற முகவரியில் மேற்படி சேவை இரு நேரமும் இயங்கவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

நிர்வாகம்,
பகவான் மருந்தகம்
221, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

(சி/7541)

உதயன்
29/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

அனுராவின் மயக்கம்

நாட்டின் இன்றைய பிரச்சினைக்கு தேசிய அரசாங்கம் ஒன்று அமைப்பதே ஒரே வழியாகும் — என்று உயர் கல்வி அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்திருக்கிறார்! அவர் இன்றைய பிரச்சினை என்று குறிப்பிடுவது தமிழர் பிரச்சினையை, வடக்கு — கிழக்குப் பிரச்சினையே என்பதில் ஐயம் இல்லை.

நாட்டின் பயங்கரவாதத்தை ஒழித்து சமாதானத்தை ஏற்படுத்த ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியும் கைகோர்த்துச் செயற்பட வேண்டும் என்று அவர் மேலும் கூறியிருப்பதால், நாட்டின் இன்றைய பிரச்சினை என்று குறிப்பிடுவது நிச்சயமாகத் தமிழர் விவகாரத்தையே என்பது உறுதியாகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்தபோது தமிழர் பிரச்சினையாக — இனப் பிரச்சினையாக — தெரிந்த வடக்கு - கிழக்கு விவகாரம், ஆளும் கட்சிக்குத் தாவியதும், அனுராவுக்கு பயங்கரவாதப் பிரச்சினையாகத் தெரிகிறது. ஆளும் அணியின் தலைவர் எதனைச் சொல்கிறாரோ எவ்வாறு காண்கிறாரோ அவ்வாறுதானே அங்கத்தவர்களும் சொல்ல வேண்டும், காண வேண்டும். இல்லையேல் அரசியல் சுகபோகத்தை அனுபவிப்பது எப்படி?

ஆகையால் தமிழர் பிரச்சினையை அவர் பயங்கரவாதம் என்று கூறுவதை பெரிதுபடுத்த முடியாது. அவர் அப்படித்தான் சொல்லுவார்; சொல்லவேண்டும்!

ஆனால் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு தேசிய அரசாங்கம் ஒன்று அமைப்பதே ஒரே வழி என்று கூறுவது அவரது அரசியல் அறிவு சூனியத்தையும் மயக்கத்தையும் வெளிப்படுத்துகிறது.

இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு ஒன்றைத் தமது சொந்தத்தில் முன்வைக்காமல் ஆளும்கட்சியும், எதிர்க்கட்சியும் ஒளித்து விளையாடுகின்றன. ஓர் அணி இராணுவத் தீர்வு என்ற நிலைப்பாட்டைக் கொண்டால், அடுத்த அணி அரசியல் தீர்வு என்கிறது. அத்தகைய இரண்டும் கைகோர்த்தால் புதிதாக ஒரு தீர்வை எட்டுவது சாத்தியமா?

ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் மட்டும் சேர்ந்துவிட்டால் தேசிய அரசாக முடியுமா? நாடாளுமன்றத்தில் (வேண்டுமானால் அதற்கு வெளியேயும்), உள்ள எல்லா அரசியல் கட்சிகளும் சேர்ந்தால் மட்டுமே தேசிய அரசாக முடியும்.

அவ்வாறு தெற்கில் உள்ள எல்லா அரசியல் கட்சிகளும் அங்கம் வகிக்கும் தேசிய அரசு உருவானால் தமிழர் பிரச்சினைக்கு உருப்படியாக ஒரு தீர்வை வகுக்க முடியுமா? அனைத்துக் கட்சி மாநாடு போன்று ஒவ்வொன்றும் ஒவ்வொருபக்கம் இழுத்து வண்டியைப் புரட்டுவதாகத்தான் முடியும்!

அவ்வாறில்லை எனில் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவைப் போல சிங்களவர் ஓர் அணியில் நின்று தமிழர்களுக்கு அநீதி விளைவிக்கும் தீர்வை வகுக்கும் ''தனிச் சிங்கள அரசாகவே'' தேசிய அரசு மாறும்.

ஆகையால் அனுராவின் தேசிய அரசு யோசனை, தமிழருக்குப் பாதகமான ஒரு தீர்வை, சிங்கள அரசியல் கட்சிகள் யாவும் சேர்ந்து, தமது பலத்தைத் திரட்டி பலாத்காரமாகத் தமிழர்கள் மீது திணிப்பதற்கு இலகு வழியே.

அனுராவின் தேசிய அரசாங்க யோசனை, வேண்டுமானால், அவர் இதுவரை அங்கம் வகித்து ஒரு வகையில் விரட்டப்பட்ட அவரது தந்தை, தாயாரின் கட்சியை மீண்டும் தமக்கு அருகில் கொண்டுவர உதவலாம். தமிழர் பிரச்சினையைத் தீர்க்கவல்ல. புதிய இடம் மலர்ப்படுக்கையாக இல்லாமை கண்டு தான் அம்மாவையும் அந்தப் பக்கம் இழுக்கும் எண்ணம் அனுராவுக்கு உதித்திருக்குமோ என்னவோ! என்ன சண்டையைப் போட்டுக் கொண்டாவது அம்மா அக்காவுடனேயே இருந்திருக்கலாம். பாவம்!

மனித உரிமை பேணல்;

அமெரிக்க நிலைப்பாட்டை சீனா ஏற்காதாம்!

பீகிங், மார்ச் 14

மனித உரிமை பேணல் தொடர்பாக அமெரிக்கா கடைப்பிடித்து வரும் நிலைப்பாட்டைத் தாம் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது என்று சீனா அறிவித்துள்ளது.

சீனாவுக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க வெளியுறவு அமைச்சர் வாறன் கிறிஸ்தொபரைச் சந்தித்துப் பேச்சுகள் நடத்திய பின்னர் சீனப் பிரதமர் லீ பெங் சீனாவின் இந்த நிலைப்பாட்டைச் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

கிறிஸ்தொபர்-லீ பெங் பேச்சுகளில் முன்னேற்றம் காணப்படவில்லை என்று பி.பி.ஸி அறிவித்தது. இதே வேளை— சீன அரசுக்கு எதிரான அதிருப்தியாளர்களைக் கைது செய்வதில் சீன அதிகாரிகள் தொடர்ந்தும் ஈடுபட்டிருப்பதாகவும் பி.பி.ஸி. தெரிவித்தது.

அமெரிக்க அமைச்சர் பீகிங்கில் தங்கியிருந்த போதும் இக்கைதுகள் இடம் பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதுவரை கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 16 என்றும் தெரிவிக்கப்பட்டது.

மனித உரிமை பேணுதல் விஷயத்தில் சீனாவின் போக்கை மாற்றும் நோக்குடன் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் பீகிங் சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-எ)

தேசிய வீடமைப்பு சபை பதவி வெற்றிடங்கள்

24இற்கு முன் விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, மார்ச் 14

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்ட அலுவலகங்களில் உள்ள பதவி வெற்றிடங்களை நிரப்ப விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கொழும்பு தினசரி ஒன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது.

வீடமைப்பு அதிகாரிகள் புத்தக பதிவாளர்கள், காசாளர்கள், சிறாப்பர்கள் ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இது தொடர்பான அறிவித்தலை வீடமைப்பு அதிகார சபையின் வடபகுதி முகாமையாளர் வெளியிட்டுள்ளார்.

விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னர் வவுனியாவில் உள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் வடமாகாண முகாமையாளருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் —

இப்பதவிக்கு ஆட்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் ஏப்ரல் 23ஆம் திகதி நடைபெறும் என்றும் அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த 89)

வடக்கே உணவுப் பொருள்; 27 ஆம் திகதி உயர் மாநாடு

வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள கூட்டுறவு மொத்த விற்பனை களஞ்சியத்தில் இருந்து வடக்கே — படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களுக்கு— அத்தியாவசிய உணவுப் பொருள்களை அனுப்புவது தொடர்பான உயர்மட்ட மாநாடு எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் நடைபெறும்.

இம்மாநாட்டில் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர்கள் கலந்து கொள்வர்.

இம்மாவட்டங்களைச் சேர்ந்த கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள் வர்த்தகப் பிரமுகர்கள் ஆகியோரும் இம் மாநாட்டுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (த-9)

ஏப். 24 முதல் 30வரை உற்பத்தி எழுச்சி வாரம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் நடத்தப்படும் உற்பத்தி எழுச்சி வாரம் ஏப்ரல் 24 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை மிக எழுச்சியுடன் நடைபெற இருக்கிறது.

தமிழீழ மண்ணில் வாழும் ''உழைக்கும் மக்களு''க்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து உற்சாகப்படுத்தும் நோக்கில் வருடந்தோறும் தென் தமிழீழம் தவிர்ந்த அனைத்து மாவட்டங்களிலும் வட்டரீதியாக இப்போட்டிகள் நடத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டு வருவது தெரிந்ததே.

இவ்வாரத்தில் நீச்சல், பாய்மரம் ஓட்டுதல், துடுப்பு வலித்தல், வலை பின்னுதல், துலா மிதித்தல், மாட்டுவண்டிச் சவாரி, உழுதல், நிலம் கொத்துதல், புதிய உணவு வகை தயாரித்தல், பனைமரம் ஏறுதல், கைப்பணி, சிறுகைத் தொழில், பதநீர் உற்பத்தி, வீட்டுத் தோட்டம் அமைத்தல், நல்லின ஆடு மாடு வளர்த்தல், பொது அறிவு, குளம் புனரமைப்பு, வாய்க்கால் திருத்தல், வீதி திருத்துதல் ஆகிய போட்டிகள் நடைபெறவிருக்கின்றன.

அத்துடன் இம்முறை நிலமற்ற, வசதியற்ற ஆனால் ஊக்கமுள்ள குடும்பங்களுக்கு கிராமிய உற்பத்திக் குழுக்கள் மூலம், தரிசாக விடப்பட்டிருக்கும் விவசாய நிலங்களை தற்காலிக அடிப்படையில் பயன்படுத்துவதற்கு வழங்குதல், சிரமதானம், குளம் புனரமைப்பு, வாய்க்கால் திருத்தல் போன்ற செயற்பாடுகளும் சிறப்பம்சமாகச் சேர்க்கப்பட்டு உள்ளன.

இவ் எழுச்சி வாரப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் விண்ணப்பதாரர்கள் அந்தந்த மாவட்ட / கோட்ட / வட்ட கிராமிய உற்பத்திக் குழுக்களினூடாக விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பங்குபற்ற விரும்பும் போட்டிகளின் பெயரைக் குறிப்பிட்டு ஏப்ரல் 1 ஆம் திகதிக்கு முன்பாக அவற்றை அனுப்புதல் வேண்டும்.

போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் (தங்கப் பதக்கங்கள், கேடயங்கள்), சான்றிதழ்களும் வருகின்ற மேதினக் கூட்டத்தில் வைத்து வழங்கப்படும். (க)

ஆங்கிலத்துடன் தமிழ் கலந்து பேசுவதை நிறுத்த வேண்டும்

வடமராட்சிக் கம்பன் விழாவில் உரை

வடமராட்சி, மார்ச் 14

இன்று எமது தமிழ் மொழியில் பிறமொழிச் சொற்கள் ஏராளம் புகுந்து விட்டன. பலரும் ஆங்கிலம் கலந்த தமிழ் மொழியைப் பேசுகிறார்கள். ஆங்கிலத்தைத் தமிழ் மொழியுடன் கலந்து பேசுவதை நாம் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

வடமராட்சிக் கம்பன் கழகத்தின் மூன்றாம் நாள் காலை நிகழ்ச்சியில் தலைமை வகித்து உரை நிகழ்த்திய திருமதி மனோன்மணி சண்முகதாஸ் இவ்வாறு கூறினார்.

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய முன்றிலில் கடந்த 6 ஆம் திகதி நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் பேசியதாவது:

தமிழர்களாகிய நாம் நமது தமிழ் மொழியில் பாண்டித்தியம் பெறுவதுடன் தமிழிலேயே பேசிப்பழக வேண்டும். அடுத்த தலைமுறைக்கு தாய்மொழியைப் போதிப்பவர்கள் தமிழிலேயே பேச, எழுத நடவடிக்கை எடுக்க வேண்டும் — என்றார்.

தொடக்கவுரை நிகழ்த்திய யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் கூறியதாவது:

ஒரு நாடு எப்படியிருக்க வேண்டும் அங்கு வாழும் மக்களின் கலை, [illegible] கல்வி, பண்பாடு, [illegible] போன்ற [illegible] பாடுகளும் எப்படி அமைய வேண்டும் என்பதை இராமாயணத்தில் கம்பன் விரிவாக எடுத்துக் கூறியுள்ளான்.

நாம் காண விரும்பும் நாடும், மக்களும் கம்பன் கூறியதைப் போன்றே அமைய விழைகிறோம். கம்பன் நாட்டுக்கும், மக்களுக்கும் கூறியவை இன்று எம் நாட்டில் நடைபெற்று வருகிறது.

இந்த வகையில் இங்கு செயற்பட்டு வரும் கம்பன் கழகமும், அதன் சேய்க்கழகங்களும் கழகத்தின் செயற்பாடுகளை பரிணமித்து பெருக்கவேண்டும்.

இதனைத் தொடர்ந்து பேராசான் இலக்கண சித்தர் இ. [illegible] தலைமையில் [illegible] நடைபெற்றது. (க 173)

பிரிட்டனில்

புகலிடம் கோருவோர் கூரை மீது ஏறி ஆர்ப்பாட்டம்

லண்டன், மார்ச் 14

பிரிட்டனின் தடுப்புக் காவல் நிலையம் ஒன்றில் வைக்கப்பட்டுள்ள நூற்றுக்கு அதிகமான புகலிடம் கோருவோர்களில் சுமார் 40 பேர், தாங்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள கட்டடத்தின் கூரை மீது ஏறி சில மணி நேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்று பி.பி.ஸி அறிவித்தது.

அதனால் கட்டடத்துக்கு சேதம் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. பிரிட்டிஷ் உள்துறை அமைச்சு அதிகாரிகளை மேற்கோள் காட்டி பி.பி.ஸி இதனை அறிவித்தது.

இதே வேளை—

தங்களின் புகலிடம் கோரும் விண்ணப்பங்களை பரிசீலனை செய்யும் வரை தங்களை தடுப்புக்காவல் நிலையங்களில் வைத்திருக்கக் கூடாது என்றும், விடுதலை செய்து விட வேண்டும் என்று கோரியும் தடுப்பு நிலையத்தில் உள்ள நூற்றுக்கு அதிகமான வெளி நாட்டவர்கள் தொடர்ந்தும் உண்ணாவிரதமிருந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-எ

தேர்தல் பிரசாரத்துக்கு கிழக்கே செல்ல மறுத்தேன்

தொண்டமான் கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 14

நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலின் போது தேர்தல் பிரசாரத்துக்காக என்னை கிழக்கு மாகாணத்துக்கு வரச்சொன்னார்கள். நான் வரமுடியாது என்று கூறிவிட்டேன். நான் அமைச்சர் பதவியில் இருப்பதால் அழைப்பதற்கெல்லாம் போக வேண்டும் என்பதில்லை.

டிக்கோயாவில் நடந்த இ.தொ.கா. கூட்டம் ஒன்றில் பேசுகையில் அமைச்சர் தொண்டமான் மேற்கண்டவாறு கூறினார்.

சிறுபான்மை மக்கள் அரசை ஆதரிக்கவில்லை என்பது சமீபத்திய உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள் மூலம் புலனாகிறது.

சிறுபான்மை இன மக்கள் பிரிந்து சின்னா பின்னப்பட்டு விட்டனர் என்றோ, இ.தொ.கா. பிளவு பட்டுவிட்டது என்றோ பேரினவாதச் சக்திகள் எச்சந்தர்ப்பத்திலும் எண்ணுவதற்கு இடம் கொடுக்கக்கூடாது.

அவ்வாறான சூழ்நிலை உருவாகுமானால் எதிர்காலத்தில் எமது மக்களின் உரிமைகளை பறித்தெடுக்கும் போக்கு மிக வேகமாக முன்னெடுத்துச் செல்லப்படும்.

நான் எடுத்துள்ள நடவடிக்கைகளால் எனது மந்திரிப் பதவியை அரசு பறித்து விடும் எனச் சிலர் நினைக்கிறார்கள்.

எனக்கு மந்திரிப் பதவி முக்கியமல்ல நமது ஐக்கியமும், பலமும், கட்டுப்பாடும்தான் முக்கியம்.

இப்படி தொண்டமான் மேலும் கூறினார். (இ-3)

எம், பிக்களுக்கு ஓய்வூதியம்; 'ஐலண்ட்' பத்திரிகை சாடல்

கொழும்பு, மார்ச் 14

ஓய்வூதியர்கள் தமது ஓய்வூதியத்தை அதிகரிக்குமாறு பல காலமாக கோரி வருகின்றனர். இக்கோரிக்கைக்கு செவி சாய்க்காத அரசு நாடாளுமன்ற உறுப்பினர்களை ஓய்வூதியத்துக்கு உரித்துடையவர்களாக்கியுள்ளது அவர்களின் சேவைக் காலத்தையும் குறைத்துள்ளது.

'ஐலண்ட்' பத்திரிகை தனது 11ஆம் திகதிய ஆசிரியர் தலையங்கத்தில் மேற்கண்டவாறு அரசை சாடியுள்ளதாக வெரித்தாஸ் தெரிவித்தது.

'ஐலண்ட்' தனது ஆசிரிய தலையங்கத்தில் —

நாலாயிரம் பேரைக் கொலை செய்ததாக கூறியவரை அரசின் உயர் பதவியில் அரசு நியமித்துள்ளது என்றும் —

ஏழு கோடி ரூபா கடனை குறைந்த வட்டியில் ஒரு வங்கி வழங்க முன்வந்த போது, அதைப் பெறாமல் கூடுதல் வட்டிக்கு அக்கடனைப் பெற அரசு முயன்றுள்ளது என்றும் —

நீதிமன்றில் குற்றவாளியாகக் காணப்பட்டவர்கள் சுதந்திரமாகத் திரிய உதவியுள்ளதாகவும் — அரசை கண்டித்துள்ளது. (த-3-6)

பன்றித்தலைச்சி பொங்கல் விழா

யாழ்ப்பாணம், மார்ச் 14

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் பொங்கல் விழா இன்றும் எதிர்வரும் 21, 28ஆம் திகதிகளிலும் ஏப்ரல் 4, 11 ஆம் திகதிகளிலும் நடைபெறும். (த-18)

தோட்ட பங்களாக்களில் அரசு சார்பு குண்டர்கள்

கொழும்பு, மார்ச் 14

தென்மாகாணத்தில் உள்ள தேயிலை மற்றும் றப்பர் தோட்டங்களில் இருக்கும் சுப்ரண்டன்களின் ''பங்களாக்கள்''யாவும் அரசுக்குச் சாதகமான குண்டர் குழுக்களால் நிரம்பி வழிகின்றன.

ராவய ஆசிரியர் விக்டர் ஐவன் இத்தகவலை வெளியிட்டார்.

எல்பிட்டிப் பகுதியில் உள்ள கிராம மக்கள் ஒன்று சேர்ந்து பங்களாக்களில் தங்கியுள்ள குண்டர்களை உடனடியாக வெளியேற்றி விடும்படி தோட்ட நிர்வாகிகளை வற்புறுத்தி வருகின்றனர் என்றும் —

தென்பகுதி மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள புதியமாற்றமாக இது கருதப்படுகிறது என்றும் —

தற்போதைய அரசை மாற்ற தென்மாகாண மக்கள் கங்கணம் கட்டி விட்டனர் என்பதை இது எடுத்துக் காட்டுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தென்மாகாண சபைத் தேர்தலில் அரசு குண்டர்களைப் பயன்படுத்த முயற்சிப்பினும் மக்கள் அதற்கு முகம் கொடுக்கத் தயாராகி விட்டனர் என்றும் — அவர் கூறினார்.

தேர்தல்களின் போது முன்னர் மக்கள் அமைதியாக இருந்தனர்; கட்சி ஆதரவாளர்கள் தான் தீவிரமாகச் செயல்பட்டனர். ஆனால் இம்முறை மக்கள் தங்கள் அமைதி நிலையைக் கைவிட்டு முன்னுக்கு வந்து, தங்களின் அபிலாஷைகளை நிலை நிறுத்துவதில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் இளைஞர்களும் யுவதிகளும் பெரும் எண்ணிக்கையில் அரசுக்கு எதிரான பிரசாரத்தில் ஈடுபட்டு வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இப்படி விக்டர் ஐவன் மேலும் தெரிவித்தார். (இ-எ-6)

வாழப்பாடி கவலை

திருச்சி சிறையில் இருந்து விடுதலைப்புலிகள் என்று நம்பப்படும் மூன்று இலங்கைத் தமிழர் தப்பிச் சென்றிருப்பது தமிழ் நாட்டில் சட்டம் — ஒழுங்கு மேலும் சீர்குலைந்து கொண்டு போவதையே எடுத்துக் காட்டுகிறது.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வாழப்பாடி இராமமூர்த்தி இவ்வாறு செய்தியாளர்களிடம் கவலை தெரிவித்தார். (த-எ)

ஜனாதிபதித் தேர்தலில் தொண்டா போட்டியிடுவார்

சிங்களப் பத்திரிகை தகவல்

கொழும்பு, மார்ச் 14

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் கிராமியத்தொழிற்துறை அமைச்சரும் சுற்றுலாத் துறை அமைச்சருமான தொண்டமான் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட உள்ளார்.

சிங்கள வார இதழ் ஒன்று இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் இனவாத போக்குக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாகவே தொண்டமான் தேர்தலில் போட்டியிட உள்ளார் என்றும்—

இது பற்றி அவர் தமது உள்நாட்டு, வெளிநாட்டு ஆதரவாளர்களுடனும் தமிழ் குழுக்களுடனும் பேச்சுகள் நடத்தியுள்ளதாகவும் அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (த-9)

சுட்டுக் கொலை

மாஸ்கோ, மார்ச். 14

தாஜிகிஸ்தானின் துணைப் பிரதமர் கடந்த வெள்ளி துப்பாக்கி நபர் ஒருவரினால் அவரின் வீட்டில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சோவியத் யூனியனின் வீழ்ச்சியைத் தொடர்ந்து மத்திய ஆசியாவில் தோன்றிய புதிய நாடுகளில் தாஜிகிஸ்தானும் ஒன்றாகும்.

ஆப்கனிஸ்தானுக்கும் சீனாவுக்கும் இடையில் உள்ள தாஜிகிஸ்தானின் ஆட்சியைப் பிடிக்க இரு கோஷ்டிகள் அங்கு சண்டையிட்டு வருகின்றன.

எனினும், துணைப்பிரதமரின் கொலைக்கு என்ன காரணம் என்பது தெரியவில்லை என்று பி. பி. ஸி தெரிவித்தது. (ஒ-எ)

ராவிற்கு ஸ்கொட்லன் யார்ட் பாதுகாப்பு

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் பிரிட்டனில் தங்கியிருக்கும் காலத்தில் அவருக்கு வழங்கப்படும் பாதுகாப்பைப் பலப்படுத்த ஸ்கொட்லன்ட் யார்ட் பொலிஸ் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-க)

பிரிட்டனின்

அடுத்த பிரதமர் குறித்து ஆளும் கட்சிக்குள் இழுபறி

லண்டன், மார்ச் 14

அடுத்த பிரிட்டிஷ் பிரதமர் யார் என்பதில் ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சிக்குள் இப்போதே போட்டி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆளும் கட்சிக்குள் அடுத்தடுத்து ஏற்பட்டு வரும் நெருக்கடி காரணமாக தற்போதைய பிரதமர் ஜோன் மேஜர் எதிர்வரும் மே மாதத்தின் பின் பதவி விலக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்ற எதிர்பார்ப்பில் இரு அமைச்சர்கள் மைக்கல் ஹெஸல்டைனும் கென்னத் கிளார்க்கும் பிரதமர் பதவியில் 'கண்' வைத்து கட்சிக்குள் தமக்கு ஆதரவு தேடுவதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் மேஜர் தமது சொந்த விருப்பத்தின் பேரில் ஓய்வுபெறும் பட்சத்திலேயே பிரதமர் பதவிக்குத் தாம் போட்டியிடப் போவதாக இரு அமைச்சர்களும் தனித் தனியே அறிவித்துள்ளனர்.

அ. தி. மு.க. ஊழல் பட்டியல்; காங்கிரஸ் சமர்ப்பிக்கும்

அ.தி.மு.க. அரசு புரிந்துள்ள ஊழல்கள் பற்றிய பட்டியல் ஒன்றை தமிழ் நாட்டில் உள்ள ஏனைய ஐந்து எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து தமிழ்நாடு காங்கிரஸ் எதிர் வரும் புதன்கிழமை மாநில ஆளுநர் டாக்டர் எம். சென்னாரெட்டியிடம் சமர்ப்பிக்கவிருக்கின்றது.

இத்தகவலை மாநில காங்கிரஸின் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி சென்னையில் செய்தியாளர்களிடம் நேற்று முன்தினம் வெளியிட்டார்

இது தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தை நேற்று முன்தினம் சென்னையில் சம்பந்தப்பட்ட ஆறு கட்சிகளும் கூட்டாக நடத்தின என்றும் தெரிவிக்கப்பட்டது (த-எ)

மலத்தியோன் விசிற பணம் அறவிட்டால் நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 14

மலத்தியோன் மருந்தை வீடுகளுக்கு சென்று தெளித்து விட்டு பின்னர் பொதுமக்களிடம் இருந்து பணம் அறவிடும் யாழ். மாநகர சுகாதார பகுதி சிற்றூழியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ் மாநகர சுகாதார பகுதி அதிகாரி ஒருவர் எச்சரித்துள்ளார்.

அண்மையில் நாவாந்துறை பகுதியில் மலத்தியோன் மருந்தை தெளித்து விட்டு பொதுமக்களிடம் பணத்தை அறவிட்ட சுகாதார பகுதி சிற்றூழியர் ஒருவர் கையும் மெய்யுமாக மாநகர சுகாதாரப் பகுதி அதிகாரிகளிடம் பிடிபட்டதாகத் தெரிவித்த அந்த அதிகாரி—

மலத்தியோன் தெளிக்கும் சிற்றூழியர்களுக்கு பணம் வழங்கி ஊக்குவிக்க வேண்டாம் என்றும் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டார். (த-17)

வனமின்றிப் போனால்-நம்
இனமின்றிப் போகும்

பருத்தித்துறை துறைமுகத்தில்

ஒரே நாளில் 985 தொன் மா இறக்கி ஊழியர்கள் சாதனை

கப்பலில் இருந்து ஒரே நாளில் கூடிய பொருள்களை இறக்கி பருத்தித்துறை துறைமுக ஊழியர்கள் சாதனை புரிந்துள்ளனர்.

நேற்று முன்தினம் வெள்ளியன்று ஆயிரத்து 924 மெற்றிக் தொன் மாவுடன் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்த 'ஹெந்தல' கப்பலில் இருந்து அன்றைய தினமே 985 மெற்றிக் தொன் மாவினை இறக்கியதன் மூலம் தொழிலாளர்கள் இந்தச் சாதனை புரிந்துள்ளனர்.

பருத்தித்துறை துறைமுகத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் ஒரே நாளில் மிகக் கூடிய தொகை பொருள்கள் இறக்கப்பட்டிருப்பது இதுவே முதல் முறையாகும்.

கப்பலில் இருந்து மிக விரைவாக மா இறக்கப்படுவதையடுத்து 'ஹெந்தல' கப்பல் இங்கிருந்து இன்று மாலையே புறப்படக் கூடியதாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(உ-5-173)

சர்வசன வாக்கெடுப்பு; அவசரம் வேண்டாம்!

முஸ்லிம் காங்கிரஸ் கோரிக்கை

கொழும்பு, மார்ச். 14

வடக்கு—கிழக்கு இணைப்பு தொடர்பான சர்வசன வாக்கெடுப்பை கிழக்கில் நடத்த அரசு அவசரப்படக்கூடாது.

முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளர் சட்டத்தரணி ரவூப் ஹக்கீம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு கிழக்கு இணைப்பு வேண்டுமா, இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்கான வாக்கெடுப்பை அரசு கிழக்கில் விரைவில் நடத்தப் போவதாக வெளிவந்த செய்திகளை அடுத்தே இவ்வாறான கோரிக்கை ஒன்றை அவர் விடுத்துள்ளார்.

வடக்கு கிழக்கு இணைப்பைப் பிரிக்கும் நோக்கில் கிழக்கில் வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதில் காட்டப்படும் அவசரம் மோசமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடாது என்றும்—

நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் கணிசமான அளவு தமிழ் வாக்குகள் ஐ.தே.கா வுக்கு கிடைத்த விதம் எம்மை சிந்திக்க வைத்துள்ளது.

கல்முனையில் தமிழ்க்கட்சிகளால் ஐ.தே.கவுக்கு போட்டி ஏற்படாததும் எமக்கு மனவேதனையைத் தருகிறது என்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

மரண அறிவித்தல்கள்

செல்லையா குமாரசுவாமி

நுணாவில் கிழக்கு சாவகச்சேரியைச் சேர்ந்தவரும், இளைப்பாறிய மாந்தை உதவி அரசாங்க அதிபருமான செல்லையா குமாரசுவாமி அவர்கள் காலமானார்.

இவர் காலஞ்சென்ற செல்லையா தம்பதிகளின் அன்பு மகனும், திலகவதியின் (இளைப்பாறிய ஆசிரியை, அமிர்தாம்பிகை வித்தியாலயம்) அன்புக் கணவரும், சுலோசனா (கனடா), ரஞ்சனா (லண்டன்), ராகுலன் (லண்டன்), வத்ஸலா (ஷப்றா — கொழும்பு), பிரபாகரன் (நோர்வே), ஆகியோரின் அன்புத் தந்தையும், ரஞ்சனநாதன் (கனடா), ரஜனி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற குமாரலிங்கம் (இளைப்பாறிய தபாலதிபர்), குமாரசிவம் (C T. B.), செல்வமணி (ஆசிரியை அ. த. க. பாடசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பத்மாவதி (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெகநாதன்(Rtd Air Ceylon Engineer) சகலனும், சாய்மிருதுளா, சத்தியன், சாரங்கன் ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
திருமதி தி. குமாரசுவாமி
(மனைவி)

நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

(29893)

வேலுப்பிள்ளை கனகசிங்கம்

(Retired Engineer - Irrigation Department)

முல்லைத்தீவைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கனகசிங்கம் காலமானார்.

அன்னார் நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும், பாஸ்கரதேவன் (கனடா), அமரதேவன் (கொழும்பு), கலாவதி, வசந்தகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலசாந்தினி (கனடா), தேவகுமாரி (கொழும்பு) மோகனசுந்தரம், நந்தினி ஆகியோரின் மாமனாரும், சஞ்ஜீவ், சிவானி, ஜானகி (கனடா), பிரணவன் (கொழும்பு), பவஹரிணி, திவ்யபாரதி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (14 - 03 - 1994) காலை 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

465/24, பருத்தித்துறை வீதி,
நல்லூர்

[சி-7550]

செல்வி ஜான்சி றோக்

யாழ். மருதடி ஒழுங்கையைச் சேர்ந்த புனித ஜொன் பொஸ்கோ வித்தியாலய மாணவி செல்வி ஜான்சி (13-03 1994) நேற்று காலமானார்.

இவர் றோக் ஞானப்பிரகாசம் - காந்திமதி தம்பதிகளின் அன்பு மகளும் ஜெனவியின் அன்புச் சகோதரியுமாவார். இவரின் நல்லடக்கம் இன்று (14-03 94) காலை 10மணிக்கு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
றோக் (தந்தை),
(கடைச்சல் இயந்திர இயக்குனர்,
சுசி இன்டஸ்ரீஸ் யாழ் வீதி)

7/2, மருதடி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

[29891]

நிபந்தனைகளை செயல்படுத்த இலங்கை மறுத்தால்

கச்சதீவை மீளப்பெறுவதே இந்தியாவுக்குள்ள ஒரே வழி!

கலைஞர் கருணாநிதி கூறுகிறார்

சென்னை, மார்ச் 14

கச்சதீவு தொடர்பாக 1974 இல் செய்துகொள்ளப்பட்ட நிபந்தனைகளை செயற்படுத்த இலங்கை அரசு மறுக்குமானால் —

இந்திய மீனவர்களின் நலன்களையும், உயிரையும் பாதுகாக்க அந்தத் தீவை இந்தியா மீளப் பெற்றுக் கொள்வதைத் தவிர வேறு மாற்று வழி கிடையாது.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. மு. கருணாநிதி இவ்வாறு கூறியுள்ளார்.

கச்சதீவை கையளிக்கும் போது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே கைச்சாத்தான உடன்படிக்கைகளின் நிபந்தனைகள் இந்திய மீனவர்களினதும் உல்லாசப் பயணிகளினதும் உரிமைகளையும், சலுகைகளையும் பாதிக்கவில்லை.

தி. மு. க. அரசு கலைக்கப்பட்ட பின்னர் 1976 இல் ஜனாதிபதி ஆட்சிக் காலத்தின் போது இரு அரசாங்கங்களும் அது தொடர்பான உடன்படிக்கை நிபந்தனைகளில் சில மாற்றங்களை கடிதத் தொடர்புகள் மூலம் ஏற்படுத்தின. அவை இந்திய மீனவர்களின் நலன்களுக்குக் குந்தகமாகின. இந்த மாற்றங்களை விலக்கிக் கொள்ள வேண்டிய முயற்சிகள் எடுக்கப்படவேண்டும்.

இந்திய மீனவர் விவகாரம் தொடர்பாக நடவடிக்கைகளை எடுக்க தமிழக முதல்வர் அனைத்துக்கட்சி மாநாடு ஒன்றைக் கூட்ட வேண்டும். — இப்படி திரு. கருணாநிதி மேலும் தெரிவித்தார்.

(உ-5)

சுவிஸிலிருந்து...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

100 ரூபா வழங்கப்படும் என்றும்—

கொழும்பு வந்துள்ள சுவிஸ் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

அகதிகளை பராமரிக்கும் கடமையை செஞ்சிலுவைச் சங்கம் பொறுப்பேற்றுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

புனர்வாழ்வு அதிகார சபைத் தலைவர் திலக் சந்திரசேகரா உட்பட மற்றும் பல சிரேஷ்ட அதிகாரிகளை இத்தூதுக் குழுவினர் சந்தித்தனர். (ஒ-3)

தீர்வுக்கு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கிலும் வவுனியாவிலும் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்பட்டமை ஜனாதிபதியின் மன உறுதியைக் குறிக்கின்றது.

கிழக்கில் புனர்வாழ்வு வேலைகளோடு தொடர்புடைய சகல அம்சங்களையும் கவனித்து, அங்கு அரச இயந்திரத்தைப் பலப்படுத்துவதற்கான வழிவகைகளைப் பற்றி ஆராய ஜனாதிபதியின் செயலாளர் திரு. கே. எச். ஏ. விஜயதாசாவின் கண்காணிப்பின் கீழ் ஒரு விசேட நடவடிக்கைக் குழு அமைக்கப்படவுள்ளது.

வடக்கு கிழக்கு பிரச்சினையைப் பொறுத்த வரை பேச்சுவார்த்தை மூலம் சமாதானத்தைக் கொண்டு வருவதற்கான சாத்தியப்பாடுகளை கண்டறிய அரச சார்பற்ற நிறுவனங்கள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

பிரேமதாசா ஜனாதிபதியாக இருந்த போது அவரை சந்தித்த அரசியல் கட்சித் தலைவர்கள், புலிகளுடனான எதிர்காலப் பேச்சுவார்த்தை குறித்து பல நிபந்தனைகளை முன் வைத்தனர். அவை இன்னமும் அப்படியே இருக்கின்றன.

பேச்சுவார்த்தைக்கு விடுதலைப் புலிகள் வருவதாக இருந்தால் அவ்வாறு வருகின்ற பிரதிநிதிகள் குழுவுக்கு திரு. பிரபாகரனே தலைமை வகிக்க வேண்டும். அப்படியில்லாவிட்டால் அவர்களோடு பேசுவதில் அர்த்தம் இல்லை. இதுவே எமது கடந்த கால அனுபவமாக இருக்கிறது.

பந்து இப்போது புலிகளின் பக்கமே உள்ளது.

அரசியல் அமைப்பு சீர்திருத்தம் தொடர்பாக ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு விடுதலைப் புலிகள் இயக்கமும் தனது யோசனைகளை முன்வைக்கமுடியும்.

அவ்வாறு முன்வைக்குமாறு நான் பகிரங்கமாக அழைப்பும் விடுத்துள்ளேன்.

தற்போது வேறு மாற்று வழிகள் தெரியவில்லை அதனால் வடக்கே பாதுகாப்புப் படையினர் தமது நடவடிக்கையை தொடர்கின்றனர் — என்றார். (உ-5)

மீன்பிடி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர் என்றும் — அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடை நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட போதும், கடற்படையினர் மீனவர்கள் மீதான தாக்குதல்கள் தொடர்தாகவும் —

கடந்த சில நாட்களில் பல மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் — யாழ் அரச அதிபர் புனர்வாழ்வு அமைச்சு செயலாளருக்கு அனுப்பிய செய்தியில் தெரிவித்துள்ளார்.

மீன் பிடிப்பதற்கான தடை இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து நீக்கப்படும் என்று மட்டும் கடந்த மாதம் 23ஆம் திகதி அரச அதிபருக்கும் புனர்வாழ்வு அமைச்சு அறிவித்திருந்தது அதன் பின்னர் நேற்றுத் தான் அது குறித்த விவரம் அனுப்பப்பட்டது.

மீன்பிடித் தடையை நீக்குவதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்குவதற்கு இழுத்தடித்து [illegible] தகவல்கள் வெளியாகியிருந்தது தெரிந்ததே. (ஒ-3)

பாடசாலை கிரிக்கெட்

யாழ்ப்பாணம், மார்ச் 14

கல்லூரிகளுக்கான கிரிக்கெட் ஆட்டங்களில் இன்று நடைபெறும் போட்டிகள் வருமாறு:-

★ யாழ். இந்து எதிர் கனகரத்தினம் ம. ம. வி — இன்று காலை 8.30 மணிமுதல் கனகரத்தினம் ம. ம. வி. மைதானத்தில்

★ பருத்தித்துறை ஹாட்லி எதிர் கொக்குவில் இந்து— இன்று காலை 8.30 மணி முதல் ஹாட்லி மைதானத்தில்.

★ சென் ஜோன்ஸ் எதிர் மானிப்பாய் இந்து — மானிப்பாய் இந்து மைதானத்தில் இன்று காலை 9 மணி முதல் மாலை 5 30 மணி வரையும், பின்னர் நாளை பிற்பகல் 2 00 மணி முதல் 5 30 மணி வரையும்.

ஸ்ரீலங்கா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

'' இலங்கைத் தமிழ் அகதிகளைக் குறைந்த எண்ணிக்கையில் கூட தாயகம் திருப்பி அனுப்புவதற்குத் தீர்மானித்துள்ள அரசாங்கங்கள் தங்களின் முடிவை புனராலோசனை செய்யவேண்டும்.

'' அகதிகள் தொடர்பான ஐ. நா. சாசனத்திற்கு தாங்கள் வழங்கியுள்ள கடப்பாடுகளை சொல்லுக்கு சொல் உணர்வுபூர்வமாகவும் இந்த நாடுகள் கௌரவிக்கவேண்டும் என்றும் நாம் கோருகின்றோம்.

'' 1993 ஆரம்பத்தில் இருந்து ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள், தமிழினத்தைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்துக்காக மட்டும் விசேடமாகக் கொழும்பிலும், மற்றைய ஏனைய இடங்களிலும் தன்னிச்சையான முறையில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு வருகின்றார்கள் '' என்று 1994 பெப்ரவரியில் வெளியான சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

'' நள்ளிரவில் சீருடை தரிக்காதவர்கள் — இலக்கத்தகடுகள் அற்ற — வாகனங்களில் வந்து பலரைக் கைது செய்து' கண்கள் கட்டப்பட்ட நிலையில் கூட்டிச் சென்றுள்ளனர் என்றும் மன்னிப்புச்சபை தன்து அறிக்கையில் தெரிவித்துள்ளது.

— இவ்வாறு தமிழர்களின் சர்வதேச கூட்டமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது (உ—எ-5)

ஈ. பி. டி. பி.—

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அனைவரையும் கைதுசெய்து மண்டூர் விசேட அதிரடிப் படை முகாமில் வைத்து விசாரணை செய்தனர்.

அதன்பின்னர் அனைவரும் காரைதீவு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். (உ-3)

குழந்தைகளுக்கு பால்மா:

விசேட உணவு முத்திரைகள் தாய்மாருக்கு கிடைக்கும்

வலிகாமம் மேற்கு, மார்ச் 14

வறுமை நிவாரண உணவு முத்திரை பெறும் குடும்பங்களின் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வந்த பால்மாவிற்கான உணவு முத்திரைத் திட்டம் நிறுத்தப்பட்டு, தாய்மார்களுக்கான விசேட உணவு முத்திரைத்திட்டம் 1994 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து அமுலுக்கு வருகின்றது.

இதற்கான சுற்று நிருபம் வறுமை நிவாரண ஆணையாளர் திரு. பீ. கே. குணவர்த்தனாவினால் சகல பிரதேச செயலர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குழந்தைகளைப் பெற்ற தாய்மார்களுக்கு ஒரு மாதத்தில் இருந்து குழந்தைக்கு ஒரு வயது ஆகும் வரை மாதத்துக்கு நூறு ரூபா பெறுமதியான விசேட உணவு முத்திரை வழங்கப்படவுள்ளது. இந்தத்திட்டம் 1994 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து அமுலுக்கு வருகின்றது. விசேட உணவு முத்திரைகளை பெறும் தாய்மார்களுக்கு இந்தக் காலப்பகுதியில் வழமையாக வழங்கப்படும் வறுமை நிவாரண உணவு முத்திரைகள் மீளப் பெறப்படும்.

(ஒ-175)

ஒரு வகை மாணவருக்கு மட்டுமே உணவு முத்திரை

ஏனையோருக்குரிய படிவங்கள் வரவில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 14

பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு முத்திரை வழங்குவதற்குரிய நான்கு வகைப் படிவங்களில் ஒரு வகைப் படிவம் மட்டுமே யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளது.

அதனால் —

வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்களாகவும், இடம்பெயராதவர்களாகவும் உள்ள பெற்றோரின் பிள்ளைகளுக்கே முதல் கட்டமாக மதிய உணவு முத்திரைகள் வழங்கப்படவிருக்கின்றன

பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மதிய உணவு முத்திரைகள் நிறுத்தப்பட்டதும் —

வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மாணவர்களுக்கு மட்டும் உணவு முத்திரை வழங்க அரசு திட்டமிட்டதும் — தெரிந்தவையே.

யாழ். மாவட்டத்தில் இடம் பெயராத — வறுமைக் கோட்டின் கீழ் உள்ள — 5 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட மாணவர்களுக்கு மதிய உணவு முத்திரைகளை வழங்க பிரதேச செயலர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மதிய உணவு முத்திரைகள் வழங்குவதற்கு நான்கு திட்டங்களை அரசு அறிவித்திருந்ததாகவும் —

வறுமைக் கோட்டின் கீழ் உள்ள இடம்பெயராத மாணவர்களுக்கு மட்டும் உணவு முத்திரைகள் வழங்கக் கூடிய படிவங்கள் மட்டுமே யாழ். மாவட்டத்துக்கு வந்து சேர்ந்துள்ளதாகவும் — பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த — வறுமைக் கோட்டின் கீழ் உள்ள பெற்றோரின் பிள்ளைகளுக்கும் —

700 ரூபாவுக்கும் 1,500 ரூபாவுக்கும் இடையில் வருமானம் பெறும் பெற்றோரின் பிள்ளைகளுக்கும் மதிய உணவு முத்திரை வழங்குவதற்கான படிவங்கள் வந்து சேரும் பட்சத்தில் மட்டுமே அவர்களுக்கும் —

மதிய உணவு முத்திரை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

[ஒ-3]

சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், மார்ச் 24

மட்டக்களப்பு மாவட்டத்தின் உன்னிச்சை இராணுவ முகாமில் இருந்த காட்டிக்கொடுத்த தேசத்துரோகி ஒருவரை முகாமில் இருந்து 150 யார் தூரத்தில் வைத்து விடுதலைப் புலிகள் சுட்டுக் கொன்றனர் என்று அறிவிக்கப்பட்டது.

கடந்த 6 ஆம் திகதியன்று மாலை 5 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

30 வயதான — உன்னிச்சையைச் சேர்ந்த — கந்தையா மகேந்திரன் என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

(உ-3)

வீரமரணம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 7 ஆம் திகதி இரவு 9 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மகிழவெட்டுவான் கோதையன் குளம் என்னுமிடத்தில் இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் விடுதலைப் புலிகள் இயக்க ஆதரவாளரான 20 வயதான மகிழவெட்டுவானைச் சேர்ந்த சீனித்தம்பி ரவீந்திரன் வீரமரணமடைந்தார். (உ-3]

சூடு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறும்.

★ தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர், கிழக்கிலும் வவுனியாவிலும் துரித அபிவிருத்தி வேலைகள் நடைமுறைப்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது.

★ காமினி குழுவினருக்கும், அனுரா அணிக்கும் மற்றும் ஸ்ரீ. ல. சு. கவில் தற்போது உள்ள அனுரா ஆதரவாளர்களான ஐந்து எம். பிக்களுக்கும் இம்முறை பொதுத் தேர்தலில் ஐ. தே. க. பட்டியலில் இடம் கொடுக்கப்படும்.

—இவ்வாறு அந்த அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-6)

இந்தியா சென்ற..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒவ்வொரு வருடத்திலும் ஐம்பதுக்கு மேற்பட்ட இலங்கை மாணவர்கள் புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் இந்தியாவுக்கு உயர் படிப்பிற்காக அனுமதிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

[illegible]—90, 1990—91, [illegible]—93 கல்வி ஆண்டுகளில் [illegible] செய்யப்பட்ட மாணவர்களில் பலரே இந்தியாவிலிருந்து திரும்பி அனுப்பப்பட்டுள்ளனர். (ஒ-9)

நொச்சியாகமத்தில் புலிகள் தாக்குதல்!

நொச்சியாகமத்தில் சத்துக்குளியாவ என்னுமிடத்தில் உள்ள பொலீஸ் காவலரண் ஒன்றின்மீது விடுதலைப் புலிகள் கடந்த செவ்வாயன்று தாக்குதல் நடத்தியதாகவும் —

இதில் ஒரு இராணுவச் சிப்பாய் காயமடைந்ததாகவும் — பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அன்றைய தினம் அதிகாலை வில்பத்து பகுதியில் தாக்குதல் ஒன்று இடம்பெற்றதாக முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தது தெரிந்ததே

அதற்கு முதல்நாள் — திங்கட்கிழமையன்று — வவுனியா கொங்குநுனியார் காவல் நிலையம் விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)

வவுனியா வந்த ரயிலில் தமிழர்களிடம் கொள்ளை

கொழும்பு, மார்ச் 14

கடந்த வியாழக்கிழமை கொழும்பில் இருந்து வவுனியாவுக்குப் புறப்பட்ட காலை ரயிலில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களிடம் இருந்து 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பணம் மற்றும் நகைகள் கொள்ளையிடப்பட்டதாகத் தெரியவந்தது

கொழும்பு கோட்டையில் ரயில் புறப்பட்ட சமயமே இக்கொள்ளை இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

வல்வெட்டித் துறையைச் சேர்ந்த கே புஷ்பராணி 32 ஆயிரம் ரூபா பணத்தையும், 7 பவுண் தங்க நகைகளையும் இழந்தார்.

சவூதி அரேபியாவில் நான்கு வருடங்கள் இருந்துவிட்டு திரும்பிய பருத்தித்துறை தும்பளையைச் சேர்ந்த — ராஜகுமார் என்னும் இளைஞன் 17 ஆயிரம் ரூபா பணத்தையும், 20 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆடைகள் மற்றும் வெள்ளிப் பொருள்களையும் இழந்தார்.

மற்றொரு பெண்ணிடம் இருந்தும் பொருள்கள் கொள்ளையிடப்பட்டன. (ஒ-3)

பொலீஸ்களஞ்சியத்திலிருந்து புலிகளுக்கு பொருள்கள்!

கொழும்பு, மார்ச். 14

குருநாகலில் உள்ள பொலீஸாரின் களஞ்சியம் ஒன்றிலிருந்து பெரும் தொகையான பொருள்கள் களவாடப்பட்டு விடுதலைப் புலிகளுக்கு விற்கப்பட்டிருப்பது தெரியவந்திருப்பதாக ''ராவய'' இவ்வார இதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

பொலீஸ் தலைமைப் பீடம் இந்தக் களஞ்சியத்தில் நடத்திய திடீர் பரிசோதனையின் போது பல லட்சம் ரூபா பெறுமதியான பொலீஸ் சீருடை, பட்டன்கள், நைலோன் கயிறுகள், பொலீஸ் இலச்சினைகள் இலக்கங்கள் அடங்கிய தகடுகள் கைத்துப்பாக்கி உறைகள் போன்ற பொருள்கள் காணாமல் போயிருப்பது கண்டுபிடிக்கப்பட்டதாக அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-9)

இந்து இளைஞர் பேரவை மாநாட்டில்

பொருளாதார தடையை நீக்கக்கோரி தீர்மானம்

பூசைப் பொருள்களை வட பகுதிக்கு எடுத்து வருவதற்கு அரசினால் விதிக்கப்பட்டுள்ள தடை நீக்கப்பட வேண்டும். அத்துடன் வடபகுதி மீதான பொருளாதாரத்தடையும் நீக்கப்பட வேண்டும்.

இலங்கை இந்து இளைஞர் பேரவையின் 11ஆவது தேசிய மாநாட்டில் மேற்கண்ட தீர்மானமும் நிறைவேற்றப்படவுள்ளது.

தேசிய மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட உள்ள தீர்மானங்கள் எதிர்வரும் 12ஆம் திகதி நடைபெற உள்ள யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் விசேட ஆலோசனைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும்.

அங்கு விவாதிக்கப்பட்ட பின்னரே தீர்மானங்கள் தேசிய மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட இருப்பதாக இந்து இளைஞர் பேரவையின் பொதுச் செயலாளர் திரு. ப. சிவலோகநாதன் தெரிவித்தார்.

தேசிய மாநாடும் பேராளர் அவையும் இம்மாதம் 26ஆம், 27ஆம் திகதிகளில் நடைபெறும்.

தேசிய மாநாட்டில் சமர்ப்பிக்கப்படவுள்ள மற்றும் சில தீர்மானங்கள் வருமாறு:

★ யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தைமூலம் வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்.

★ பூட்டப்பட்டுள்ள இந்து ஆலயங்கள் மீண்டும் திறக்கப்பட வேண்டும். அதற்கு ஏற்ற விதத்தில் படையினர் அப்பகுதிகளில் இருந்து வாபஸாக வேண்டும். (இ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, [illegible] இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 14 03 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.